சிற்றூர்களுக்கு மின்சார வசதி அளிப்பதில் தமிழகம் முன்னேற்றமடைந்திருப்பதைத் தலைமையமைச்சர் பாராட்டியிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

தோற்ற அமைச்சர் சுப்பிரமணியத்துக்கு பதவி?

புதுடில்லி, மே 15—

தேர்தலில் தோற்ற முன்னாள் இந்திய உணவமைச்சர் சி. சுப்பிரமணியத்துக்கு, திட்டக்குழுத் துணைத் தலைவர் பதவி கொடுக்கப்படும் என்று தெரிகிறது.

மாற்றியமைக்கப்படும் திட்டக்குழுவில் அமைச்சரல்லாத உறுப்பினர்கள் ஐவர் இருப்பாராம்.

பொருத்தமற்ற வாதம் பயனற்றது

'கொடுமைகளை அனுபவித்த பின்னரே கழகம் ஆட்சிபீடமேறியிருக்கிறது'

காங்கிரசாரின் எண்ணம் ஈடேறப் போவதில்லை—டி. வி. நாராயணசாமி விளக்கம்

சென்னை, மே 13—

"'தி. மு. கழகம் நீதிக் கட்சியின் பரம்பரை—தி. மு. கழகத்தினர் ஆங்கிலேயர்களின் அடிவருடிகள்' என்று காங்கிரசார் கூறிவருகின்றனர். நீதிக் கட்சியின் எந்தக் கூட்டத்திலாவது இரா. நெடுஞ்செழியனோ, மு. கருணாநிதியோ கலந்துகொண்டதாகக் கூறமுடியுமா?

"அறிஞர் அண்ணா அவர்கள், நீதிக் கட்சிக் கூட்டத்திலே பேசினார்கள்—உண்மைதான்; ஆனால் அவர், 'நீதிக் கட்சி, ஆங்கிலேயர்களின் எடுபிடியாக இருத்தல் கூடாது' என்றுதான் கூறிவந்திருக்கிறார்.

"மிட்டாக்கள், பட்டம் பதவிகளை எதிர்பார்த்தவர்கள் தாம் நீதிக் கட்சியிலே இருந்தார்கள்; அந்தக் கட்சியை ஏழைகளின் உறைவிடமாக—பாட்டாளிகளின் பாசறையாக ஆக்கியது அறிஞர் அண்ணா அவர்கள்தான். சேலத்தில் நடைபெற்ற நீதிக் கட்சி மாநாட்டில் சரிகைக் குல்லாய்களை அப்புறப்படுத்தியது அறிஞர் அண்ணாதான்.

"ஆகவே, தி. மு. கழகத்தினரை, 'ஆங்கிலேயரின் எடுபிடிகள்; அடிவருடிகள்' என்று கூறுவது பொருந்தாத வாதமாகும்"

என்று, நடிகமணி டி. வி. நாராயணசாமி, இன்று இங்கு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையில் விளக்கினார்.

சென்னை 81-வது வட்டத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:—

"1947-ல் இந்தியத் துணைக் கண்டம் விடுதலையடைந்தபோது, பெரியார் அவர்கள், 'துக்க நாள் கொண்டாட வேண்டும்' என்று கூறினார்கள்.

அப்போது, 'ஆகஸ்டு 15—துக்க நாள் அல்ல; விடுதலை நாள்தான்' என்று கருத்துத் தெரிவித்தவர் அறிஞர் அண்ணா.

தி. மு. கழகத்தினரை அந்நியரின் 'அடிவருடிகள்' என்றும், 'தேச பக்தி' இல்லாதவர்கள் என்றும் காங்கிரசார் எதை ஆதாரம் வைத்துக் கூறுகின்றார்கள் என்று தெரியவில்லை.

காங்கிரசில் இருப்பது யார்?

ஒரு காலத்தில் காங்கிரசில் தியாகிகள் இருந்தார்கள்; நாட்டுக்குத் தொண்டாற்றியவர்கள் இருந்தார்கள்; அந்தத் தேச பக்தர்கள் இப்போது, காங்கிரசில் இருக்கின்றார்களா? பண முதலைகளும் சுரண்டிக் கொழுக்கும் கோமான்களும் தான் இப்போது காங்கிரசில் இருக்கின்றார்கள்.

நல்ல எதிர்க் கட்சி இல்லையே!

தி. மு. கழகம் எதிர்க் கட்சியாக இருந்தபோது, அப்போது ஆட்சிபீடத்தில் இருந்த காங்கிரசுக் கட்சி, 'தரமான எதிர்க் கட்சி இல்லையே' என்று வருத்தப்பட்டது; 'நல்ல எதிர்க் கட்சி இல்லை' என்று காங்கிரசுத் தலைவர்கள் கூறினர்.

நாட்டு மக்கள், தி. மு. கழகத்திடம் ஆட்சிப் பொறுப்பைக் கொடுத்துள்ளனர்! 'நல்ல எதிர்க் கட்சியாகப் பணிபுரியுங்கள்' என்று கூறி மக்கள், காங்கிரசாரை எதிர்க் கட்சியாக்கியுள்ளனர்.

மக்களின் தீர்ப்பை மதித்து, நல்ல எதிர்க் கட்சியாகப் பணியாற்றாமல், காங்கிரசார் தரம் குறைந்த நிலையில் பேசி வருகின்றார்கள்; நாட்டு மக்களிடத்தில் தவறான பிரச்சாரம் செய்து வருகின்றார்கள்; 'தி. மு. கழகத்தை ஆட்சியிலிருந்து கவிழ்த்துவிட வேண்டும்' என்று கருதி முயற்சிகள் செய்கிறார்கள்.

எத்தனையோ அடக்குமுறைகளுக்கு ஆளாகியது தி. மு. கழகம்! சிறைத் தண்டனையை ஏற்று, கொடுமைகளை அனுபவித்திருக்கிறது! செந்தமிழ்ப்பு ஏற்றிருக்கிறது! பல தியாகச் செம்மல்களை—அரிய உயிர்களை நாட்டுக்காக அர்ப்பணித்திருக்கிறது!

இதற்கும் பிறகுதான் தி. மு. கழகம், மக்களின் ஆதரவுடன் ஆட்சிக்கு வந்திருக்கிறது!

தி. மு. கழகத்தின் ஆட்சியைக் கவிழ்க்க, காங்கிரசாரால் ஒரு காலும் முடியாது."

உ.பி. மாநிலத்தில் மொழிக் குழப்பம்—ஆளுங் கட்சிகளிடை கருத்து மோதல்

ஆங்கிலத்தை நீக்குவதில் அரசியல் தலைவர்கள் அக்கறை

மாணவர்களோ ஆங்கிலப் பாட மொழியையே நாடுகின்றனர்!

லக்னோ, மே 14—

இங்கு ஆட்சியிலுள்ள கூட்டணியிலிருக்கும் கட்சிகளிடையே மொழி பற்றிக் கருத்து வேறுபாடுகள் எழுந்துள்ளன.

முதலமைச்சர் சரண் சிங்கின் ஜன காங்கிரசு, ஆங்கிலம்—இந்தி—ஏதேனுமொரு இந்திய மொழி ஆகியவற்றைக் கட்டாயமாகக் கற்கும் மும்மொழிக் கொள்கையை ஆதரிக்கிறது. கூட்டணியிலுள்ள பெரிய கட்சியான ஜனசங்கம், 'ஆங்கிலம் நீங்கிய இரு மொழிக் கொள்கை வேண்டும்' எனகிறது!

இந்த அடிப்படையில், 'ஆங்கிலத்தை விருப்பப் பாடமாக்கும் திருந்திய கொள்கையை அரசாங்கம் சிபாரிசு செய்ய வேண்டும்' என்று ஜனசங்கம் கோருகிறது.

கூட்டணியிலுள்ள இடது சாரியைச் சேர்ந்த ச. சோ. கட்சி, கம்யூனிஸ்டுக் கட்சி ஆகியன, 'ஆங்கிலத்தை நீக்க வேண்டும்' என்பதை ஏற்கின்றன; ஆனால் உருது மொழிக்கு இடம் கொடுக்கும் இரு மொழிக் கொள்கை வேண்டுமென்று விரும்புகின்றன.

சுதந்திரக் கட்சி—ஜன காங்கிரசைப் போன்று — மும்மொழிக் கொள்கையை ஆதரிக்கிறது.

ஆனால், பெரும்பாலான கட்சிகள் ஆங்கிலத்தை விரட்ட வேண்டுமென்று பேசிக்கொண்டிருக்கும் இந்நேரத்தில், ஆங்கிலத்தைப் பாட மொழியாகக் கொண்ட பள்ளிகளில் ஏராளமான மாணவர்கள் சேருகின்றனர்!

கல்லூரிகளிலும், ஆங்கிலத்தைப் பாட மொழியாகக் கொண்ட வகுப்புகளிலேயே மாணவர்கள் ஏராளமாகச் சேருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடலூருக்குப் பாதாளச் சாக்கடை

அமைச்சர் சாதிக்பாட்சா உறுதிமொழி

கடலூர், மே 13—

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான தொகையை மத்திய அரசு அளித்ததும், கடலூர் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுத்துக் கொள்வதாக அமைச்சர் சாதிக்பாட்சா, கடலூர் நகராட்சி தமக்கு அளித்த வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் உறுதியளித்தார்.

வங்கத்தில் பட்டினிச் சாவு

18 இலட்சம் பேர் பஞ்சத்தால் பாதிப்பு

கல்கத்தா, மே 14—

"மேற்கு வங்கத்தில் பங்குரா, புருலியா ஆகிய மாவட்டங்களில் ஏப்ரல்முதல் 22-பேர் பட்டினியால் மாண்டுள்ளனர்"

என்று லோக் சேவா சங்கச் செயலாளர் அருண்கோஷ் தெரிவித்துள்ளார்.

புருலியா, பங்குரா, மல்டா ஆகிய மாவட்டங்களிலும், மேற்கு தினஜ்பூரின் சில பகுதிகளிலும் மக்கள் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டு அவதியுறுவதாக அவர் கூறினார்.

18 இலட்சம்பேர் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டு எலும்புந் தோலுமாகக் காட்சியளிக்கின்றனர் என்றும், வெறும் இலைபைக்கூட அவர்கள் புசிப்பதாகவும், குழந்தைகளும் காய்ந்த சருகுகளைப் போலக் காட்சியளிப்பதாகவும் அவர் கூறினார்.

அமெரிக்காவும் பின்வாங்குகிறது!

இந்தியாவுக்கு உணவு உதவுவதில் பிற நாடுகளின் தயக்கம்

புதுடில்லி, மே 14—

"இந்தியாவின் உணவுத் தேவையை நிறைவு செய்ய பல நாட்டு உணவு உதவிக் கூட்டமைப்பின் உறுப்பு நாடுகள் தவக்கத்தையும், தயக்கத்தையும் காட்டிவருவதன் விளைவாக அமெரிக்க அரசு, தனது புதிய உணவு உதவியை—ஒவ்வொன்றும் 15 இலட்சம் டன் கொண்டது—இரு கூறுகளாகப் பிரிக்கலாம்" என்று இங்கு அரசியல் வட்டாரப் பார்வையாளர்கள் கூறுகின்றனர்.

இந்தியாவுக்கு 30 இலட்சம் டன் தானியத்தை அளிக்க அமெரிக்கா வாக்களித்துள்ளது; ஆனால் கூட்டமைப்பின் மற்ற உறுப்பு நாடுகள், அந்த அளவுக்கு ஈடான உணவை அல்லது பணத்தை அளிக்க வேண்டும் என்று நிபந்தனை விதித்துள்ளது.

ஆனால், கனடா — ஜப்பான் — பிரிட்டன் ஆகியவைதான் திட்டவட்டமான உணவு உதவியைத் தெரிவிக்க முன்வந்துள்ளன. மேற்கு ஜெர்மனியும் உதவி அளிக்க ஆர்வம் கொண்டுள்ளது. ஆனால், இதுவரை திட்டவட்டமான அறிவிப்பு எதுவும் இல்லை!

இந்தியாவுக்கு மேலும் உதவுவதில் இத்தாலியும், பிரான்சும் ஏதும் தெளிவிக்காமல் சும்மா இருக்கின்றன. எனவே, அமெரிக்கா தவிர மற்ற நாடுகள் அளிக்கக்கூடிய உணவு உதவி 30 இலட்சம் டன்னை எட்டாது; அது அமெரிக்க உதவியில் பாதி அளவுக்குத்தான் இருக்கலாம்.

இதற்கிடையே அமெரிக்கா கூறியுள்ள ஒரு யோசனை இங்கு அதிகார வட்டாரங்களில் வியப்பை உண்டாக்கியுள்ளது; அதாவது, மற்ற நாடுகள் போதிய உணவு உதவி அளிக்கவில்லை என்றால், அமெரிக்க உணவை வர்த்தக நேர அடிப்படையில் வாங்கிக்கொள்ளுமாறு இந்திய அதிகாரிகளிடம் அமெரிக்கா வற்புறுத்தி வருகிறது.

அந்நியச் செலாவணியைச் செலவிட்டு உணவை வாங்குவது இந்தியாவுக்குக் கட்டுபடியாகாது என்றே தோன்றுகிறது.

பத்து இலட்சம் டன் தானியத்தின் விலை 7 கோடியே 50 இலட்சம் டாலராகும் (ரூ. 52 கோடி 20-இலட்சம்).

ஆரணித் தொகுதியில் வாக்காளர் சந்திப்பு

ஏ. சி. நரசிம்மன், ஜி. விசுவநாதன் சுற்றுப் பயணம்

வாக்காளரை நேரில் சந்தித்து, வாக்காளருக்கு நன்றி தெரிவிக்கும் வகையில், சட்டமன்ற உறுப்பினர் ஏ.சி.நரசிம்மனும், நாடாளுமன்ற உறுப்பினர் ஜி. விசுவநாதனும், மே, 18, 19, 20 ஆகிய நாட்களில், ஆரணித் தொகுதியில் கிராமங்கள்தோறும் சுற்றுப்பயணம் செய்கின்றனர். அவர்களுடன் ஊராட்சி ஒன்றியத் தலைவர் ஆர். என். வீரபத்திரனும் வருகிறார். அவர்கள் வரும்போது கிராம மக்கள் தங்கள் குறைகளையும் தேவைகளையும் குறிப்பிட்டு மனுக்களை நேரில் கொடுக்கும்படி வட்டச் செயலாளர் மு. ந. இராமன் கேட்டுக்கொள்கிறார்.

ஒவ்வொரு நாளும் காலை 7 மணிக்குப் புறப்பட்டுச் சுற்றுப் பயணம் செய்வர்.

சுற்றுப்பயணம் வரும் ஊர்கள் விவரம் வருமாறு:—

[illegible] சுவான்ராவ் பேட்டை, [illegible] வி. நகரம், கனிகிலுப்பை, மட்டதாரி, காட்டேரி, நேத்தப்பாக்கம், மாமண்டூர், மணியூர், வடக்குமேடு, நந்தகொரட்டூர், இரும்பேடு, மெய்யூர், ஆதனூர் வெள்ளேரி அடங்கல்கள், லாடவரம், மொரப்பந்தாங்கல்—பொதுக்கூட்டம்.

19—5—67-ல் சேவூர், அக்ராபாளையம், சிறுமூர், வெட்டியாந்தொழுவம், முள்ளண்டிரம், பூசிமலைக்குப்பம், 12-புத்தூர், குண்ணத்தூர், அரியப்பாடி, ராட்டினமங்கலம், பையூர், மொழுப்பூண்டி, கல்பூண்டி, வேலப்பாடி, ஆகாரம், கலலேரிப்பட்டு, வடுகசாத்து, அரையாளம், மருசூர், தச்சூர், புலவன்பாடி — பொதுக்கூட்டம்.

20—5—67-ல் நடுக்குப்பம், காமக்கூர், முள்ளிப்பட்டு, சித்தேரி, வினை, நெசல் (புதுப்பட்டு) விண்ணமங்கலம், தென்னூர், இந்திரவனம், மருத்துவாம்பாடி, கெங்கைசூடாமணி, நம்பேடு, மங்கலம், பட்டு, தச்சாம்பாடி, தேவிகாபுரம், முருகமங்கலம்—

பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டிய நிலையில் நாடு!

சூழ்நிலைக்கேற்பப் பாடுபட மக்கள் முன்வரவேண்டும்

புதுடில்லி, மே 15—

"நாளுக்கு நாள் மக்கள் தொகை நெருக்கத்தோடு பல பெரிய பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டிய நிலையில் உள்ள பெரிய நாடு நமது; நாடு எனவே, நாம் ஒவ்வொருவரும் அவரவர் சூழ்நிலைக்கேற்ப இந்நாட்டின் புது மலர்ச்சிக்குப் பாடுபட வேண்டும்—அதில் ஈடுபடவேண்டும்.

"நம்மை எதிர்நோக்கியுள்ள கடமை—பொறுப்பு மகத்தானது; அதனால், இதுகாறும் காலங்கடத்தியது போல் அல்லாமல், ஒவ்வொரு கணமும் செயலாற்ற வேண்டும்; அப்போதுதான் மக்களாட்சி, நாட்டின் எந்தப் பகுதியிலும், அதன் மணம் குன்றாது கமழ முடியும்"

என்று, டாக்டர் ஜாகீர் உசேன், மூன்றும் குடியரசுத் தலைவராக அறிவிக்கப்பட்டு பதவியேற்றபின் ஆற்றிய உரையில் குறிப்பிட்டார்.

கல்கத்தாவில் அண்ணா படத் திறப்பு

வங்கச் சட்டமன்றத் தலைவர் திறக்கிறார்

கல்கத்தா, மே 15—

வங்கத் தலைநகரான கல்கத்தாவில் தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களின் படத் திறப்பு விழா நடைபெறுகிறது. இம்மாதம் 20-ஆம் நாள் கல்கத்தா தமிழ்ச் சங்கச் சார்பில், வங்க சட்டமன்றத் தலைவர் திரு விஜயகுமார் பானர்ஜி அண்ணா படத்தைத் திறந்து வைப்பார்.

'நமஸ்காரம்' போய் 'வணக்கம்' வந்தது!

புதுடில்லியில் நடைபெற்ற நீர்ப்பாசன மற்றும் மின்சக்தித் துறை அமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொண்ட அமைச்சர்களை, மத்திய அமைச்சர் வி. கே. வி. ராவ் தலைமையமைச்சர் இந்திராவுக்கு அறிமுகம் செய்து வைத்துக் கொண்டிருந்தார்.

தமிழகப் பொதுப்பணி மற்றும் நீர்ப்பாசனத் துறை அமைச்சர் மு. கருணாநிதியும், கல்வி மற்றும் மின்சக்தித் துறை அமைச்சர் இரா. நெடுஞ்செழியனும் இருக்குமிடத்திற்கு வந்ததும் அவர்களை அமைச்சர் அறிமுகப் படுத்த முற்படுவதற்கு முன்பே இந்திரா, அவர்களை நோக்கித் தமிழில், 'வணக்கம்' என்று கூறினார்.

உணர்வோர் உள்ளம்

காங்கிரசு வியாபாரிகளின் மக்கள் விரோதச் செயல்

மே 15-ம் நாள் முதல் அரிசி விநியோகக் கடைகள் அனைத்திலும் 'ரூபாய்க்கு ஒரு படி அரிசி' என்னும் திட்டத்தை அரசாங்கம் அமுல் நடத்துவதும், அதன் காரணமாக அரசாங்கத்தை ஏழை எளிய மக்கள் அனைவரும் ஒருமுகமாக வாழ்த்தி நிம்மதிப் பெருமூச்சு விடுவதும் நாடு அறிந்தவையாகும்.

திருவிழா நாளாகவே மே 15-ம் நாளை மக்கள் கருதி, நீண்ட பல ஆண்டுகளுக்கும் பின்னர் ரூபாய்க்குப் படி அரிசி வாங்கும் மகிழ்ச்சியில் அன்று ரேஷன் கடைக்குச் சென்ற மக்களை குறிப்பாக வட சென்னையில் ரேஷன் கடை வைத்திருக்கும் காங்கிரசுக்காரர்கள் பலர், 'அரிசி இல்லை' என்று சொல்லித் திருப்பி அனுப்பிவிட்டிருக்கிறார்கள்.

ரூபாய்க்கு ஒரு படி அரிசி வாங்கப்போன மக்களிடம், 'அரிசியே இல்லை' என்ற ஏமாற்றத்துடன் அனுப்பிவிடுவது எத்தகைய மனஉளைச்சலை ஏற்படுத்தக்கூடியது என்பதை தெரிந்தே அந்த வியாபாரிகள் விளையாடியிருக்கிறார்கள்!

'அரிசி இல்லை' என்று சொன்னது மட்டுமல்ல—அரசாங்கத்தின் திட்டத்தையும், அதன் நோக்கத்தையும் திரித்தும் பழித்தும் கூறி, அன்று மக்களை வெறுங் கையுடன் அனுப்பியிருக்கிறார்கள்!

இவர்கள், நாட்டில் சூழ்நிலையையும் அதிருப்தியையும் விதைத்துக் கொண்டிருக்கும் வியாபாரிகள்! இவர்களைப் போன்றவர்களால், நல்ல-தூய மனம் படைத்த வணிகர்களும், பொதுமக்களின் கடுமையான விமர்சனத்திற்கு உள்ளாகிறார்கள்!

தாங்கள் செய்யும் தொழிலின் தொடர்பாகப் பொதுமக்களுக்கு ஒருவகையான தொண்டு புரிகிறோம் என்று நினைக்கும் ரேஷன் கடை வியாபாரிகளும் இருக்கிறார்கள்.

அத்தகு வியாபாரிகளுக்கும்—நஞ்சைப் பரப்பி, பேராசைப்பிடிப்பு மனப்பான்மையைக் காட்டிக்கொண்டு வட சென்னையில் உள்ள சில ரேஷன் கடை வியாபாரிகளைப் போலுள்ளவர்களுக்கும் வித்தியாசம் தெரியவேண்டும் என்று வணிகர்களே பெரிதும் விரும்புவர் என்று நினைக்கிறேன்.

ஆகவே, 15—5—67 அன்று தனது கடையில் 'ரூபாய்க்கு ஒரு படி' என்ற விகிதத்தில் அரசாங்கத் திட்டத்தை அமுல் படுத்தி, அன்று அரிசி வாங்க வந்த அனைவருக்கும் வழங்குவதற்கும் போதிய முயற்சி எடுத்துக் கொள்ளாதிருந்தவர்களையும், ஒப்புக்கு இரண்டொரு மூட்டையை மட்டும் விற்பனை செய்துவிட்டு நாள் முழுவதும் வரும் மக்களிடம், 'அரிசி இல்லை' என்று சொல்லிக் கொண்டிருந்தவர்களையும், அரசாங்கத்தின் அரிசிப் பங்கீட்டுத் துறையில் அதிக நம்பிக்கை இல்லாமல் ரேஷன் கடை வைத்துக்கொண்டிருப்பவர்களையும் கண்டுபிடிப்பது அரசாங்கத்திற்குச் சுலபமே!

இப்படிக் கண்டுபிடித்து அவர்களுக்கிருக்கும் ரேஷன் கடை லைசென்ஸை அல்லது அதற்கென இருக்கும் பெர்மிட்டை உடனடியாக ரத்து செய்துவிட வேண்டும்.

"மே 15-ல் ஆவலோடு வந்த ஏழை—எளிய மக்களை, 'அரிசி இல்லை' என்று திருப்பி அனுப்பிய ரேஷன் கடைக்காரர் எவரும், இனி என்றைக்குமே அரிசி விநியோகிக்க இயலாதவர்கள்" என்பது உறுதி.

பொன்னுரங்கம்
சென்னை-21

சோழவந்தான் தொகுதியில் தீ விபத்து

சோழவந்தான் தொகுதி மன்னவட்டி கிராமத்தில் தீ விபத்து ஏற்பட்டு 41 குடிசைகள் எரிந்து சாம்பலாகிவிட்டன.

செய்தியறிந்ததும் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பி. எஸ். மணியன், நிலக்கோட்டை வட்ட தி. மு. க. துணைச்செயலாளர் கு. குருசாமி ஆகியோர் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறினார்கள். பிறகு தாசில்தாரைச் சந்தித்து ஆவன செய்தார்கள்.

பாதிக்கப்பட்டவர்களுக்குத் தலா ரூ. 40 வீதம் உதவித்தொகை தரப்பட்டது.

'நம்பிக்கையான நல்லரசு தமிழகத்தில்தான் தோன்றியுள்ளது'

'காங்கிரசு ஆட்சி செய்ய நினைக்காததையும் கழக ஆட்சி செய்து காட்டுகிறது'

'ஏழைப் பாட்டாளிகள் நலனில் நாட்டமுள்ளவர்கள் இன்று ஆளுகின்றனர் — ம. பொ. சிவஞானம் தெளிவுரை

சென்னை, மே 16—

"நம்பிக்கையான—நிரந்தரமான அரசு தமிழ்நாட்டில் மட்டும்தான் ஏற்பட்டுள்ளது! காங்கிரசுக்காரர்கள், தொழிலாளர்களுக்கு — ஏழைகளுக்கு இருபதாண்டுக்காலமாக செய்யாததை—செய்ய நினைக்காததைத் தி. மு. கழக ஆட்சியினர் செய்து காண்பிக்கின்றார்கள்!"

என்று, சென்னை ஒற்றைவாடை கலை அரங்கில், சட்ட ஞாயிறன்று நடந்த சிறப்புக் கூட்டத்தில், திரு. ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ. அவர்கள் பேசுகையில் சுட்டிக்காட்டினார்.

சிம்சன் கூட்டுக் கம்பெனித் தேசியப் பணியாளர்கள் சங்க சார்பில் நடந்த இக்கூட்டத்திற்கு தோழர் இரங்கசாமி தலைமைதாங்கினார்.

தமிழக முதலமைச்சர் அண்ணா, தோழர் கண்ணன் (சிம்சன்) கிருஷ்ணமூர்த்தி (வர்மா—ஷெல்) இராமலிங்கம் (டான்சி—ஆட்டோ தொழிலாளர் சங்கம்), சத்தியமூர்த்தி, ஜி. விசுவநாதன் ஆகியோர் உரையாற்றினர்.

அசைத்துப் பார்க்க இயலவில்லை!

ம. பொ. சிவஞானம் அவர்கள் மேலும் பேசியதாவது:—

"தொழிலாளர்களும், உழவர் பெருமக்களும் ஏமாந்து போகக் கூடியவர்களாக இருந்தால், காங்கிரசுக்காரர்கள் தி. மு. கழக ஆட்சியை அசைத்துப் பார்க்க நினைப்பார்கள்! உழைப்பாளி ஒவ்வொருவரும் இன்றைய ஆட்சியின் பக்கத்தில்தான் இருந்து வருகிறார்கள்.

இது என்ன பேச்சு?

'ஒரு ரூபாய்க்கு 1 படி அரிசி போடலாமா? அதனால் பஞ்சம் படி அல்லவா குறைந்துவிடும்? அவைச் குறைந்துவிடுமானால், அரிசி விலையை இந்த ஆட்சி குறைக்கக்கூடாது' என்று தொழிலாளர் சங்கத் தலைவர் ஒருவர் கூறியதாக நண்பர்கள் இங்கே கூறினார்கள்.

அவர், உண்மையில் தொழிலாளர் நலத்தில் நாட்டம் கொண்டவராயிருந்தால் அப்படிக் கூறியிருக்கமாட்டார்.

இது எப்படி இருக்கிறதென்றால், 4 ஆண்டுக் காலமாக மகப்பேறு இல்லாத ஒரு பெண் ஊழியரை, 'அநியாயமாக இந்த நாலாண்டுப் காலமாய் பேறு காலத்துக்காக நீங்கள் எடுக்கவேண்டிய ஓய்வு விடுமுறை வீணாகப் போய்விட்டதே' என்று சொன்னால்— அது எந்த அளவிற்கு மடமையைக் காட்டுமோ—அதுபோல் இருக்கிறது—சிம்சன் தொழிலாளர் சங்கத் தலைவர் குருமூர்த்தியின் பேச்சு!

வயிற்றெரிச்சல் ஏன்?

தி. மு. கழக ஆட்சியில் விற்கப்பட விருக்கும் ரூபாய்க்கு ஒரு படி அரிசி பற்றி, காங்கிரசுக்காரர்களுக்கு வயிற்றெரிச்சல் ஏன்? அவர்களால் மக்களுக்குச் செய்ய முடியாததை, இன்றைய அரசினர் செய்து கொண்டு வருகிறார்கள். ஏன்—அவர்கள் நினைக்காததைக் கூடச் செய்துகொண்டு வருகிறார்கள்; இன்னும் பல செய்யப்போகிறார்கள்.

நலிவுற்ற மக்களுக்கு வலி ஊட்ட வகை செய்வதே அறிஞர் அண்ணா அவர்களது அமைச்சரவையின் நோக்கம்.

அதனால்தான்—அப்படிப் பட்ட நல்ல காரியங்களைச் செய்துவருவதால்தான், நான் இந்த அரசினருக்கு எனது முழு ஒத்துழைப்பையும் கொடுத்து வருகிறேன்.

அக்கிரமத்திற்குத் துணை போனவர்கள்!

தேர்தலுக்கு முன், நடைபாதைகளில் அரிசியைக் கொட்டி வைத்துக்கொண்டு, படி ரூ. 2.50—ரூ. 3—என்ற அளவில் விற்று வந்தார்கள்.

இத்தகைய அக்கிரமங்களை, அப்போதிருந்த காங்கிரசு ஆட்சியினர் தடுத்து நிறுத்தினார்களா?

மாறாக, அந்த அக்கிரமச் செயல்களுக்கு உடன்பாடாகவே நடந்துவந்திருக்கிறார்கள்!

நடைபாதையில் அரிசி விற்பவர்கள் செங்கற்பட்டு மாவட்டத்திலிருந்துதான் அரிசியைக் கடத்திக்கொண்டு வருகிறார்கள். [illegible]

போன்ற பெரிய நிலச்சுவான்தார்கள்தான், கொள்ளை இலாபத்திற்கு அரிசியை அங்கே விற்கிறார்கள்!

இப்படிப் பெரு நிலக்கிழார்கள் மேலும் பதுக்கிக்கொண்டே போவதற்குத்தான் அன்றைய அரசு, 'தடையேதும் விதிக்காதே' என்றும், 'இடையூறாக இராதே' என்றும் போலீசுக்காரர்களுக்கு உத்தரவு போட்டது.

அதே நேரத்தில், ரேஷன் கடைகளில் அரிசி இருப்பு இல்லாத இழிநிலையை ஏற்படுத்தி விட்டிருந்தனர்!

இதனால், செங்கற்பட்டு மாவட்ட நிலக் கிழார்கள், கொள்ளை இலாபம் அடித்தார்கள்!

பக்தவத்சலம், தாம் ஒரு நிலப்பிரபு என்பதால்தான் அப்படித் திட்டமிட்டுச் செய்தார்!

சட்டம், சட்டத்தை உருவாக்குகிற மக்களுக்கே சதி செய்கிறபோதுதான், மக்கள், அந்தச் சட்டத்தைச் சற்றும் மதியாது தூள் தூளாக உடைத்தெறியக் கொதித்தெழுகிறார்கள்!

சிந்திக்கும் ஆற்றல் அவர்களுக்கில்லை!

சிந்திக்கின்ற திறமை எனக்கு இருப்பதால்தான், இன்றைக்குத் தினம் மக்களுக்கு நன்மை செய்யும் தி. மு. கழக ஆட்சிக்கு ஆதரவாக இருந்து வருகிறேன்.

சிந்திக்கும் ஆற்றல் அற்றும் போனவர்களாக அவர்கள் இருப்பதால்தான், நன்மை செய்யும் தி. மு. கழக ஆட்சியைக் குறை கூறியும், எதிர்த்தும் வருகிறார்கள்!

சாது மிரண்டதால் ஏற்பட்ட நிலையல்லவா?

இந்த மாநிலம் முழுவதிலும் இந்தி எதிர்ப்பும் போர் ஒருமுகமாக மிகத் தீவிரமாக மாணவர்களால் நடத்தப்பட்டது.

இரு திங்கள் இந்த மாநிலமே இருளில் ஆழ்ந்திருந்தது!

அமைதியும், சோகமும் நிலவியிருந்தது!

மாணவர்களது உரிமைக் குரல் பெரும் புயலாக மாறெங்கும் வீசியது!

மாணவர்களாகிய சாதுக்கள், மிரண்டெழுந்ததனால் ஏற்பட்ட போர் அல்லவா அது!

அப்போதிருந்த ஆட்சியினரை அகற்றினால்தான் அராஜகத்தைப் போக்கிட முடியும் என்று மாணவமணிகள் முடிவெடுத்தனர்; உங்களைப் போன்ற தொழிலாளர் பெருமன்றங்கள் கருதின!

28 ஆண்டுக் காலம் காங்கிரசிலிருந்துவிட்டு, இக் கழக ஆட்சிக்கு இன்று ஆதரவு அளித்து வருகிறேன் என்றால், ஒன்று நான் முட்டாளாக இருக்கவேண்டும்—இல்லையென்றால், நாட்டின் நலமே பெரிதென மதிக்கும் பெருநோக்கு உள்ளவனாக இருக்கவேண்டும்; நாட்டு மக்கள் நலனில் நல்லெண்ணம் கொண்டவனாக இருக்கவேண்டும்.

தடை விதிப்பது அவசியம்

தமிழகத்தில் சனநாயக ரீதியில் அமைந்துள்ள ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு, காங்கிரசுக்காரர்கள் முயற்சி செய்துவருகிறார்கள்.

சனநாயகத்திற்கு முற்றிலும் விரோதமான இவர்களது நடவடிக்கைக்கு மத்திய அரசு தடை விதிக்க வேண்டும்.

அறவே மறந்தனர்!

காங்கிரசுக்காரர்கள் பதவி ஏற்றதும், காந்தியார் கொள்கையை அறவே மறந்தார்கள்! ஆட்சியில் அராஜகத்தைக் கைகொண்டார்கள்!

அதையெல்லாம், காந்தியார் அன்றே பார்த்துவிட்டுத்தான், 'காங்கிரசைக் கலைத்துவிடுங்கள்' என்றார்!

48 கோடி மக்களின் பொதுச் சொத்தாகக் காங்கிரசு நிறுவனம் என்றென்றும் இருக்க வேண்டும்' என்பதற்காகத்தான், அதை அன்றே கலைத்து விடும்படி மனம் நொந்து காந்தியார் கூறினார்.

அன்றே மனம் நொந்து கூறிய காந்தியார் இன்றையத் தினம் உயிரோடு இருந்திருந்தால், பணத் திமிங்கலங்கள் புகுந்துகொண்ட காங்கிரசின் அராஜகத்தை அனுமதித்திருப்பாரா? அவர்களை ஆட்சி நடத்தத்தான் விட்டிருப்பாரா?

சீர்கேடான நிலை!

திரு. குருமூர்த்தியின் ஆதிக்கத்திற்குக் கீழேயுள்ள ஒரு நிறுவனத்திலேயே இத்தனை ஊழல்கள் — நேர்மையின்மை — நீதியின்மை நிலவுகிறதென்றால், காமராசர், பக்தவத்சலம் போன்றவர்களின் ஆட்சியில் எத்தனைய சீர்கேடுகள் விளைந்திருக்கும் என்று ஓர் கணம் நினைத்துப் பாருங்கள்!

அஞ்சத் தேவையில்லை!

"தொழிலாளர்களது ஆட்சி நடக்கும்போது, தொழிலாளர்களின் நலன்கள் நிச்சயம் கவனிக்கப்படும்; அவர்களது குறைகள் போக்கப்படும்; அவர்களுக்கு எல்லா வழிகளிலும் இந்த அரசு ஒத்துழைப்பு தரும்" என்று அறிஞர் அண்ணா அவர்கள் உறுதியாக உங்களிடையே தெரிவித்திருக்கிறார்கள்.

எனவே, தொழிலாளரிடையே அச்சம் தவிர்க்கப்படவேண்டும்; அச்சமின்றி, உரிமைகளுக்காகப் போராடும் மனஇயல்பை அனைவரும் பெற வேண்டும். எந்த எதிர்ப்பு சக்தியைக் கண்டும், யாரும் அஞ்சத் தேவையில்லை!

மக்கள் விழிப்பும் விவேகமும் உள்ளவர்களாக இருந்தால்தான், பெறவேண்டிய நன்மைகளைப் பெற்று மகிழ்ச்சியாக வாழ முடியும் என்று கூறி விடைபெறுகிறேன்."

காக்க இருப்பவை

17—5—67

துலுக்கப்பட்டி

தி. மு. க. சார்பில் மே தின விழா; மாலை 6-மணிக்கு துலுக்கப்பட்டி முக்கு ரோட்டில்; தலைவர்: எம். கந்தசாமி; பேசுவோர்: தா. காளிமுத்து, எஸ். பி. மணிவம், இரா. இராமச்சந்திரன், மற்றும் பலர்.

18—5—67

பொன்மலை

மேலக்கல்கண்டார்கோட்டை தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு திரு. வி. க. திடலில்; தலைவர்; பி. மதிவேலன்; பேசுவோர்: மு. இராமநாதன், கூ. மு. பெரியசாமி, சி. கணேசக் கண்டியர், கே. துரைராசு.

சென்னை 37-வது வட்டம்

தாளமுத்து—நடராசன் நினைவு மன்றத்தின் சார்பில் இரவு 7-மணிக்கு சூளை பெரியதம்பி முதலித் தெருவில்; தலைவர்: ச. சீனிவாசன்; பேசுவோர்: கி. மனோகரன் எம்.ஏ., எம்.பி., நடிகமணி டி. வி. நாராயணசாமி, மு. மாசிலாமணி, தி. கிருட்டினமூர்த்தி, தனசேகரன், எம். வரதராசுலு எம்.சி., சந்திரமோகன், பூ. ஆர். நாதன்.

கோயில்பட்டி

தி. மு. தொ. மு. சங்க சார்பில் மே தின விழா; மாலை 6-மணிக்கு கோயில் மேட்டில்; தலைவர்: எம். ஆர். ஆர்தர் வில்லியம்; பேசுவோர்: எஸ். முத்து எம்.எல்.சி., பெ. சீனிவாசன் எம்.எல்.ஏ., ஏ. எஸ். சுப்பிரமணியம் எம்.எல்.ஏ., சி. ஆர். எட்மண்ட் எம்.எல்.ஏ., கோபால்சாமி; சி. பாலசுப்பிரமணியம், வி. வல்லயுதம், மற்றும் பலர்.

சென்னை 62-வது வட்டம்

தி.மு.க. கிளை சார்பில் நன்றியறிவிப்புக் கூட்டம்; மாலை 7-மணிக்கு பெரியமெட்டு போலீஸ் ஆஸ்பிட்டல் ரோடில்; தலைவர்: இராமமூர்த்திராசு: பேசுவோர்: சி. பா. ஆதித்தனார் (சட்டமன்ற அவைத் தலைவர்) ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., எம். எஸ். இராமச்சந்திரன், எஸ். கன்னியப்பன் எம்.சி., எம். திராவிடமணி, அ. சு. நடராசன்.

சென்னை 1-வது வட்டம்

[illegible] மன்றச் சார்பில் மே தின விழா; மாலை 7-மணிக்கு புதவண்ணாரப்பேட்டை அருணசலேசுவரர் கோயில் திடலில்; தலைவர்: பி. எஸ். பாலகிருட்டினன்; பேசுவோர்: சி. பா. ஆதித்தனார் (சட்டமன்ற அவைத் தலைவர்), அமைச்சர் [illegible] சா. கா. வேழவேந்தன் எம்.எல்.ஏ., திருச்சி செளந்தராசன், எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ., து. கோவிந்தசாமி.

பட்டினியால் இரத்தப் புரட்சி மூளும்!

வேளாண்மையை புறக்கணித்ததால் விளைவை அனுபவிக்கிறோம்!

வெளிநாட்டுக்காரர்களின் பாராட்டைப் பெறவே தொழில்களில் பணத்தைக் கொட்டப்பட்டது

உபதேசம் வேண்டாம்—முதலில் உழவனுக்குத் தண்ணீர் கொடுங்கள்—உற்பத்தி பெருகும்

மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களுக்குப்பிறகும் தன்நிறைவை அடைய முடியாத அவலநிலை—

மக்களவைத் தலைவர் சஞ்சீவியார் எச்சரிக்கை

சென்னை, மே 14—

"மக்கள் பட்டினி கிடக்க நேரிட்டால் நாட்டில் இரத்தப் புரட்சியே மூளும். அதன் மூலம் நாடு சீர்குலைய நேரிடும்"

என்று எச்சரிக்கை செய்துள்ளார்—நாடாளுமன்ற மக்களவைத் தலைவர் திரு. என். சஞ்சீவி ரெட்டி!

மயிலை சீனிவாச சாஸ்திரி மண்டபத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில் அவர் பேசுகையில் உணவுப் பிரச்சினை குறித்துக் கடுமையாக எச்சரித்தார்; அவர் பேசியதாவது:—

"இப்பொழுது நாட்டுக்குத் தேவையானது உணவு உற்பத்தித் திட்டமே தவிர, நான்காம் ஐந்தாண்டுத் திட்டமல்ல!

"எல்லா அரசியல் கட்சிகளும் ஒன்றுபட்டு உணவுச் சிக்கலைச் சமாளிக்க வழிகாண வேண்டும்.

உண்மையிலேயே நாம் நிலைமை உணர்ந்து நடப்பவர்களானால், நமது தொழில் திட்டங்களை நிறுத்திக் கொண்டு நமது கவனத்தை யெல்லாம் வேளாண்மைத் துறையில் திருப்பிவிட வேண்டும்.

உருக்குத் தொழிற்சாலைகளை நிறுவுவதில் கொட்டிச் செலவு செய்த பணத்தில் பத்தில் ஒரு பங்கை வேளாண்மைத் துறையில் செலவிட்டிருந்தால்கூட இன்று உணவுத் துறையில் இந்த நாடு இவ்வளவு மோசமான நிலையைச் சந்திக்க நேர்ந்திருக்காது!

உணவு முனையில் நடந்திருப்பதைப் பற்றி நான் எந்த ஒரு அரசியல் கட்சியையும் விமர்சிப்பதாக நினைக்கக் கூடாது. மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களுக்குப் பிறகும் உணவுத் துறையில் நாடு தன்நிறைவு பெய்த முடியவில்லை!

நாம் ஏராளமான நிதியைப் பெற்றிருக்கிறோம்; எந்த ஆற்றலைப் பெற்றிருக்கிறோம்; ஆனால் அதிகம் விளைவிக்கக் கூடிய ஆற்றலையோ, அதிக அளவு இறக்குமதி செய்யும் ஆற்றலையோ பெற்றிருக்கவில்லை! பட்டினி கிடக்கும் ஆற்றலைத்தான் பெற்றிருக்கிறோம்! முந்தைய ஐந்தாண்டுத் திட்டங்களெல்லாமே ஒரு சீராக உருவாக்கப்படவில்லை!

உருக்குத் தொழிற்சாலைகள் உட்படக் கனரகத் தொழில்களெல்லாம், 'வெளிநாட்டவர் வந்து பார்த்து நமது தொழில் முன்னேற்றத்தைப் பாராட்ட வேண்டும்' என்ற எண்ணத்தின் அடிப்படையிலேயே காட்சிப் பொருள்களாகவே உருவாக்கப்பட்டுள்ளன! அதே நேரத்தில் வேளாண்மை புறக்கணிக்கப்பட்டுவிட்டது!

பிலாய் உருக்குத் தொழிற்சாலைக்குச் செலவிட்ட ஆயிரம் கோடி ரூபாயைக் கொண்டே நாட்டின் எல்லா நீர்ப்பாசனத் திட்டங்களையும் நிறைவேற்றிட முடியும்.

தொழில் வளர்ச்சி தேவையானதுதான்; ஆனால் உணவு உற்பத்திக்குத் தேவை மிகக் கூடிய அளவுக்கு அதில் செலவிட வேண்டியதில்லை!

விலைவாசி உயர்வால் உற்பத்தியாளரோ, மண்டிகளை வாங்குவோரோ எந்தவிதப் பலனையும் அடையவில்லை!

இருபதாண்டுக்கு முன்னால் ஜவகர்லால் நேரு சொன்னார்—'கள்ளச் சந்தைக்காரர்களைப் பிடித்து பக்கத்தில் உள்ள மரத்திலேயே தூக்கிலிட வேண்டும்' என்று!

இந்த இருபதாண்டுக் காலத்தில் நாம் அப்படி ஒருவனையாவது அருகில் கூடச் செல்லவில்லை!

நமது தலைவர்கள் வெறும் வாய்ப் பேச்சுக்களுக்குப் பதில் உழவனுக்குத் தண்ணீர் வழங்கியிருப்பார்களேயானால், உணவு உற்பத்தி பெருகியிருக்கும்!

எப்போதும் ஒரு குறிப்பிட்ட அளவு வருமானத்தையே பெற்றுவரும் குடும்பங்கள், விலைவாசி உயர்வால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன!

தொழிற்சாலையில் பணியாற்றும் தொழிலாளரும், அரசு ஊழியர்களும், தங்கள் வருமானத்தில் 90 சதவிகிதம் அதிகம் பெற்றிருக்கும் அதே நேரத்தில், எப்போதும் ஒரே அளவு வருவாய் பெறுவோர் அமைதியாகத் தொல்லைகள் அனுபவித்து வருகின்றனர்!

நாட்டின் வருமானம் என்னவோ பெருகித்தான் இருக்கிறது; ஆனால் அளவு முழுவதும் ஒரு சில குடும்பங்களிடமே முடங்கிவிட்டது!

இப்படி ஒரு சிலரிடமே செல்வம் குவிக்கப்படுவது சோசலிசத்துக்குமட்டுமல்ல—நாட்டின் ஜனநாயகத்துக்கு ஆபத்து விளைவிப்பதாகும்!

ரூ. 30,000 பெறுமான நெல் பிடிப்பட்டது

தமிழகத்தில் கள்ளக் கடத்தல் தடுப்பு

சென்னை, மே 14—

கடந்த சனிக்கிழமையன்று போலீசார் நடத்திய கள்ளக் கடத்தல் தடுப்பு வேட்டையில் தமிழ்நாட்டில் மொத்தம் ரூ. 80,000 மதிப்புள்ள நெல்லையும், மூன்று லாரிகளையும் பறிமுதல் செய்தனர்.

தாம்பரம், வண்டலூர், நெய்வேலி, கரூர், வேலூர் ஆகியஇடங்களில் 236குவிண்டால் அரிசி பிடிபட்டது.

கரூர் இரயில் நிலையத்தில் இரயில் வண்டியின் 'கார்' பெட்டியிலேயே 21 மூட்டைகளைப் போலீசார் பிடித்திருக்கின்றனர்!

ஆவினாசியிலும், சேலம் அருகிலும், தர்மபுரியிலும், மூன்று லாரிகள் மடக்கிப் பிடிக்கப்பட்டன; அவற்றில் 150 குவிண்டால் அரிசி இருந்தது.

உள்ளாட்சிமன்றங்களுக்கு கூடுதல் அதிகாரம்

உள்ளாட்சி ஒன்றிப்பு அமைப்பிலும் மாறுதல் செய்யப்படும்

தமிழக அரசு ஆய்வு: அமைச்சர் செ. மாதவன் தகவல்

திருச்சி, மே 14—

"ஊராட்சி மன்றங்களுக்கு இன்னும் அதிக அதிகாரங்கள் வழங்குவதற்காக, 1958-ல் நிறைவேற்றப்பட்ட ஊராட்சிச் சட்டத்தைத் திருத்த, தமிழக அரசு சிந்தித்து வருகிறது"

என்று சட்டத் துறை அமைச்சர் திரு. செ. மாதவன் கூறினார்.

திருச்சிக்கு அருகில் மருதூரில் உள்ள ஊராட்சியின் சார்பில் சட்டத் துறை அமைச்சர் செ. மாதவனுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில், மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"ஊராட்சி ஒன்றிப்பு அமைப்புகளிலும் தீவிர மாறுதல்கள் செய்ய அரசு கருதியுள்ளது.

தற்போது ஊராட்சி ஒன்றிப்புக்களில் பணிபுரியும் வேளாண்மை விரிவு அலுவலர்கள், கூட்டுறவு விரிவு அலுவலர்கள் முதலியோர், ஒரு பக்கத்தில் வட்டார விரிவு அலுவலர்களுக்கும், இன்னொரு பக்கத்தில் தொடர்புடைய துறையைச் சார்ந்த மாவட்ட அலுவலர்களுக்கும் கீழே வேலை செய்யவேண்டியிருக்கிறது. இது முரண்பாடான நிலைமையாகும்.

இது தொடர்பாக ஆய்வு செய்ய மத்தியப் பிரதேசத்திற்கு ஓர் உயர் அலுவலரை அனுப்பியுள்ளோம். அவருடைய அறிக்கை வந்ததும் இது தொடர்பாகச் சிந்தித்து ஆவன செய்யப்படும்.

ஊராட்சித் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையை மாற்றி அமைப்பதுபற்றி அரசு ஆய்வு செய்துவருகிறது. தற்போதைய மறைமுகத் தேர்தல் முறையில், சில தீமைகள் உள்ளன; எந்த நேரத்தில் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் வருமோ என்று தலைவர் பயந்து கொண்டிருக்கும் நிலைமை இருக்கிறது."

நீடாமங்கலம் ஊராட்சிமன்றத்திலும் அமைச்சர் [illegible] மாதவனுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

வயிற்றெரிச்சலைக் காட்டிக்கொள்ளும் காங்கிரசார்!

ஒரு படி அரிசித் திட்டத்தைக் கேலி செய்து தப்புப் பிரச்சாரம்

உண்மையை எடுத்துச் சொல்லும் கழகத் தோழர்களைத் தாக்க முயற்சி

[illegible], மே 16—

தமிழக அரசு நிறைவேற்றியுள்ள ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடும் திட்டத்தை எப்படியாவது எதிர்க்க வேண்டும் என்ற கெடு நோக்கத்தில், இராயபுரம் பகுதியில் காங்கிரசார், எதிர்க்கக் கிளம்பியுள்ளனர்.

"உணவுப் பங்கீட்டுக் கடையில் கொடுக்கப்படும் புழுங்கல் அரிசி தண்ணீர்ப் பதம் இல்லாமல் தரமாக இருக்கிறது" என்று ஏராளமான தாய்மார்கள் பேசிக் கொள்கின்றனர்; என்றாலும், தவறான பிரச்சாரம் செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் காங்கிரசார், இராயபுரத்தில் துர்ப்பிரச்சாரம் செய்கின்றனர்.

திங்கட் கிழமையன்று ரூபாய்க்கு ஒரு படி அரிசி வீதம் கடைக்காரர்கள் கொடுக்கத் தொடங்கினர்.

சில காங்கிரசார், ஒரு வரத்திற்குரிய அரிசியை வாங்கிச் சென்று, அதில் உள்ள நெல், கல், உமியைப் புடைத்தெடுத்து, ஒரு படி அரிசியின் அருகில் வைத்து, 'இந்த அரிசிதான் ரூபாய்க்கு ஒரு படி' என்று கூறிக் கேலி பேசுகின்றனர்—மக்கள் மத்தியில் தப்பான எண்ணம் ஏற்பட எதிர்ப்புப் பிரச்சாரம் செய்துவருகின்றனர்.

"பத்துப் படி அரிசியைப் புடைத்தெடுத்து, அதில் உள்ள உமி, கல்லை ஒரு படி அரிசியில் கலந்து, முறத்தில் வைத்துக் கொண்டு, காங்கிரசார் தப்புப் பிரச்சாரம் செய்கின்றனர்"

என்று கழகத் தோழர்கள் விளக்கி கூறினால், காங்கிரசார் அவர்களைத் தாக்க முற்படுகின்றனர்.

சென்னை 10-வது வட்டத் தி. மு. கழகத் துணைச் செயலாளர் தோழர் இராசமன்னாரை, காங்கிரசுக் காலிகள், சட்டையைப் பிடித்து இழுத்து இம்சித்திருக்கின்றனர்!

"ரேஷன் கடைகளில் அரிசி போடவே காங்கிரசுக்கு யோக்கியதை இல்லை; ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுவதை இவர்கள் குறை கூற வந்திருக்கிறார்கள்" என்று, குடிசைகளில் உள்ள தாய்மார்கள் பேசிக்கொள்கிறார்கள்.

தேர்தல் செலவுக்காகப் பெற்ற பணத்தைத் திருப்பித் தரவேண்டும்

கட்சி மாறிய சட்டமன்ற உறுப்பினர்கள் மீது நடவடிக்கை

சண்டிகார், மே 16—

"காங்கிரசுக் கட்சியிலிருந்து பொதுத்தேர்தலுக்காக வாங்கிய பணத்தை இரண்டு வாரங்களுக்குள் திருப்பித் தராவிட்டால், வழக்குத் தொடுப்போம்"

என்று, பஞ்சாப் மாநில காங்கிரசுக் கட்சி, முன்னாள் காங்கிரசு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நோட்டீசு அனுப்பியிருக்கிறது.

சென்ற பொதுத்தேர்தலின்போது பஞ்சாப் மாநில காங்கிரசுக் கட்சியிலிருந்து [illegible] சட்டமன்றத்திற்கு வேட்பாளராக நின்று வெற்றியும் பெற்றனர்.

அந்த ஏழு பேரும் தற்போது காங்கிரசுக் கட்சியை விட்டுவிட்டு ஐக்கிய முன்னணிக் கட்சியில் சேர்ந்துவிட்டதைத் தொடர்ந்தே பஞ்சாப் காங்கிரசுக் கட்சி, அவர்கள்மீது வழக்குத் தொடர முடிவு எடுத்துள்ளது.

பொதுத் தேர்தலின்போது, கட்சிவிட்டுக் கட்சி மாறிய ஏழு முன்னாள் காங்கிரசுக்காரர்களும், தேர்தல் செலவுக்காகக் காங்கிரசுக் கட்சியிலிருந்து பணம் வாங்கியிருந்தார்களாம். இப்போது அந்த ஏழு பேரும் காங்கிரசைக் கைகழுவிவிட்டு வேறு கட்சிக்குப் போய்விட்ட காரணத்தால், காங்கிரசுக் கட்சி தேர்தல் செலவுக்காகத் தந்த பணத்தை இரண்டே வாரத்தில் திருப்பித் தர வேண்டுமென்றும், இல்லாவிட்டால் அந்த எழுவர் மீதும் வழக்குத் தொடுக்குமென்றும் பஞ்சாப் காங்கிரசுக் கட்சி எச்சரிக்கை செய்துள்ளது. வழக்குத் தொடுப்பதற்கான நோட்டீசும் அனுப்பியிருக்கிறது.

"குறிப்பிட்ட காலத்திற்குள் பணத்தைத் திருப்பித் தராத சட்டமன்ற உறுப்பினர்மீது, வழக்குத் தொடர்ந்தாவது வசூலிப்போம்" என்பதில் காங்கிரசுக் கட்சி தீவிரமாக இருக்கிறதாம்.

மணிக்கு 4 டன் அரைக்கும் புதிய அரிசி ஆலைகள்

இந்தியாவில் 24 இடங்களில் நிறுவப்படுமாம்

ஜப்பானிலிருந்து இயந்திரங்கள் வந்திறங்கும்

கௌகாத்தி, மே 16—

"நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அமைப்பதற்காக 24 நவீன அரிசி ஆலைகளுக்கான இயந்திரச் சாதனங்களை ஜப்பானிலிருந்து இந்தியா தருவிக்கும்"

என்று உணவுக் கார்ப்பரேஷன் தலைவர் சே. டி. சாண்டி, செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அடுத்த ஆண்டு துவக்கத்திலிருந்து இந்த இயந்திரங்கள் வந்திறங்கத் துவங்கும் என்றும், இதற்காக இந்திய அரசு உணவுக் கார்ப்பரேஷனுக்கு ரூ. 32 இலட்சம் மதிப்புள்ள யென் (ஜப்பான் நாணயம்) கடனை அளித்துள்ளது என்றும் அவர் கூறினார். அவர் மேலும் விளக்கியதாவது:—

"இந்த அரிசி ஆலைகள் [illegible] ஒவ்வொன்றும் ஒரு மணிக்கு 4 டன் நெல்லை அரைக்க முடியும். ஒரு நாளைக்கு 20 மணி நேரம் வேலை செய்தால் 80 டன் நெல் அரைக்க முடியும்.

இலாபகரமாக இவை இயங்க வேண்டுமென்றால், ஓர் ஆலை, குறைந்தது ஆண்டில் 150 நாட்களாவது இயங்க வேண்டும்; அதாவது 15,000 டன் நெல்லை அரைக்க வேண்டும்.

நெல்லை அரைப்பதிலிருந்து அரிசியை மூட்டை கட்டுவது வரை எல்லாவற்றையும் இயந்திரமே செய்யும்.

இந்த ஆலைகளை எங்கெங்கு நிறுவுவது என்பதை மத்திய அரசும் மாநில அரசுகளுமே முடிவு செய்யவேண்டும்."

மாவட்டத்துக்கு ஒரு திருமண மண்டபம்

சென்னை, மே 16—

நடுத்தர மக்கள், திருமணம் போன்ற விழாக்களை நடத்த வசதியாக, ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் ஒரு திருமண மண்டபம் கட்ட அரசு யோசித்து வருவதாக [illegible] பொதுப்பணித் துறை அமைச்சர் மு. கருணாநிதி அறிவித்தார்.

"இம்மண்டபங்களை அரசு கட்டும்; அல்லது நகராட்சி மன்றமே கட்டுமாறு அரசு கேட்டுக்கொள்ளும்" என்றார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுவோராகவும், அச்சிடுவோராகவும் கொண்டு அறிவகம் அச்சகத்தில் (24, குயிலானராயணப் [illegible] தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.